**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 41/2023**

PW1 – திரு.தனசேகரன் நாள். 02.12.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரிதிவாதி என்னுடைய பூர்வீக சொத்தை அவருடைய பெயருக்கு மோசடியாக பட்டா மாற்றியது தொடர்பாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி என்னுடைய பூர்வீக சொத்து என சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 296/18 ஆகும்.

2. தாவா சொத்தினுடைய அளவு என்னவென்றால் 2.5 ஏர்ஸ் ஆகும். வருவாய் ஆவணங்கள் 2.5 ஏர்ஸ் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.296/8 யை சர்வே எண்.296/8A மற்றும் 296/8B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி சர்வே எண்.296/8 யை சர்வே எண்.296/8A மற்றும் 296/8B என உட்பிரிவு செய்துள்ளார் என சொல்லி

உள்ளேன் என்றும் அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட பட்டாக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. எப்போது உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் 12.03.2023 ம் தேதி அவரது நிலத்தை அளவீடு செய்ய முற்பட்ட போது ஏற்பட்ட தாவாவின் போது தெரிய வந்தது. மேற்படி பிரச்சினை தொடர்பாக வருவாய் அலுவலகத்தில் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் யார் உள்ளார்கள் என்றால் அர்சுணன் என்பவரது சொத்து உள்ளது.

4. பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் நான் மேற்படி அர்சுணனனுக்கு கிரையம் கொடுத்த விவரத்தை சொல்லவில்லை என்றால் இல்லை, எனது நான்குமால் விபரத்தில் அதைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. அர்சுணன் அவரது பெயரில் பட்டா மாற்றி உள்ளார் என்றால் சரிதான். அர்சுணன் 296/8A சொத்திற்கு அவரது பெயரில் பட்டா மாற்றி உள்ளார் என்றால் அதைப்பற்றி தெரியாது.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை